2023 அக்டோபர் 9]

ஆனால், 6 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று பொருள்களை வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதைப்போல, சேவகானபள்ளி ஊராட்சியில் கொடியாளம் கிராமத்தில் 150 குடும்ப அட்டைகள் உள்ளன. அவர்களும் 3.5 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று அந்தப் பொருள்களை வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மக்கள் நலனைக் கருதி இந்த இரண்டு கடைகளையும் பிரித்துத் தர அரசு முன் வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு பிரதான கடை என்று சொல்கின்றபொழுது 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். அந்த எண்ணிக்கையிலிருந்து பகுதி நேர நியாய விலைக் கடைகள் கொடுக்கின்ற நேரத்தில், 1.5 கிலோ மீட்டராவது குறைந்தபட்ச தூரம் இருக்க வேண்டும். அந்தப் பகுதியில் 150 குடும்ப அட்டைதாரர்கள் இருக்க வேண்டும். அப்படியிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

206—

கால்நடை மருந்தகம்

***57819—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, பெருவளநல்லூர் ஊராட்சியில் புதியதாகக் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 அக்டோபர் 9

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) லால்குடி தொகுதி, பெருவளநல்லூர் ஊராட்சியில் புதியதாகக் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிய காலகட்டத்தில், அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்களைக் கூட்டி அந்தப் பகுதி மக்களினுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்து நிறைவேற்றித்தர எங்களுக்கெல்லாம் கட்டளையிட்டார்கள். அந்தக் கட்டளையை ஏற்று எங்கள் லால்குடி தொகுதியில் முதல் ஊராட்சியாக பெருவளநல்லூர் ஊராட்சியைத் தேர்வு செய்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். அந்தக் கூட்டத்தில் அப்பகுதி மக்களால் எழுப்பப்பட்ட கோரிக்கைகளில் இது முதல் கோரிக்கை. எனவே, அந்தப் பகுதி மக்களினுடைய கோரிக்கையையும், எங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்தில் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருவதாக அளித்த வாக்குறுதியையும் நிறைவேற்றித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம் மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்போர் தங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே அனைத்து சேவைகளையும் பெறும் வகையில், கால்நடை கிளை நிலையங்கள் மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. அந்தந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே அப்பகுதியில்

2023 அக்டோபர் 9]

கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அரசு அமைத்துத் தருகின்றது. ஒரு கிராமப் பகுதியிலுள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்துக்கும்மேல் இருக்குமானால் அங்கு கால்நடை கிளை நிலையமும், 5 ஆயிரத்துக்கும்மேல் இருக்குமானால் அங்கு கால்நடை மருந்தகமும் தரப்படுகின்றது. கிளை நிலையத்தில் தினமும் 30 கால்நடைகளுக்குக் குறையாமல் சிகிச்சையை வழங்கும் பட்சத்தில், அந்தப் பகுதியில் 5 ஆயிரம் கால்நடை அலகுகள் இருக்கும்பட்சத்தில் அந்தக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள லால்குடி தொகுதி, பெருவளநல்லூர் ஊராட்சியில், கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்திற்கும் குறைவாக அதாவது 464 அலகுகள் மட்டுமே உள்ளதால் புதிதாகக் கால்நடை மருந்தகம் அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளின் எண்ணிக்கை சற்றேறக்குறைய இருப்பினும், பசு மாடுகள் சினைப் பருவத்திற்கு வருகின்றபொழுது 4, 5 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பூவாளூர், புதூர், உத்தமனூர் கால்நடை மருத்துவமனைகளுக்கு, இரண்டு மாடுகளை ஒரு நபர் கொண்டு செல்ல வேண்டுமென்பது மிகவும் கடினமான செயல். அதுபோன்ற நேரங்களில் மாடுகளினுடைய திறனானது மிகவும் மிருகத்தனமானதாக இருக்கக்கூடிய சூழ்நிலையில் அவற்றை ஓட்டிச் சென்று அந்தச் சினைப் பருவ ஊசி என்பது இடப்படுவதற்கு மிகவும் சிரமமான சூழ்நிலையாக இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு பசுவின் கன்றுகள் அம்மை நோய்களுக்கு உட்படுகின்றன. அவற்றிற்கும் தடுப்பு மருந்துகள் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள லால்குடி தொகுதி, பெருவளநல்லூர் ஊராட்சியில் 350 மாட்டின அலகுகள், 15 செம்மறி ஆட்டின அலகுகள், 81 வெள்ளாட்டின அலகுகள், 18 கோழியின அலகுகள் என மொத்தம் 464 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. மேலும், பெருவளநல்லூர் ஊராட்சிக்கு நான்கு கிலோமீட்டர் தொலைவில் பல்லபுரம் மற்றும் பூவாளூர் ஆகிய கால்நடை மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள லால்குடி தொகுதி, பெருவளநல்லூர் ஊராட்சியில் எந்த வகையிலாவது அந்தக் கால்நடைகளுக்கான மருத்துவச் சேவை செய்வதற்கான, மருத்துவ நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று அதற்கான சாத்தியக்கூறினை ஆராய்வோம். அதுபோல் இன்றைக்கு எந்த நோயாக இருந்தாலும் அதற்கு உடனடியாக தடுப்பூசி போடுவதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு முழுவதும் எங்கள் துறை எடுத்து வருகின்றது.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரியிலுள்ள கால்நடை மருந்தகம் கால்நடை மருந்துவமனையாகத் தரமுயர்த்தப்படுமா என்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது கேட்டிருந்தேன். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான*

2023 அக்டோபர் 9]

சாத்தியக்கூறுகள் உள்ளதா என்பது குறித்து துறையின் மூலமாக ஆய்வு செய்திருக்கிறோம். பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டும் என்றும், கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்த வண்ணம் உள்ளனர். அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் துறை அலுவலர்கள்மூலமாக ஆய்வு செய்யப்படும். அரசு வகுத்துள்ள வரையறைகளுக்குட்பட்டிருப்பின், அரசின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, வருங்காலங்களில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் பெருநகரத்திலுள்ள கால்நடை மருத்துவமனை, காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கேற்றவாறு போதுமானதாக இல்லாததால், அது தரமுயர்த்தப்பட வேண்டும். ஏனென்றால், காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள உத்திரமேரூர், ஸ்ரீபெரும்புதூர், செய்யாறு, காவேரிப்பாக்கம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் ஏற்ற வகையில் அதனைப் பன்னோக்கு கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துரு குறித்தும், எந்தெந்த பகுதியில் என்னென்ன நடைமுறைகளைச் செய்ய வேண்டும் என்ற வகையில், பன்னோக்கு மருத்துவமனை அமைப்பதற்கான திட்டங்கள் குறித்தும், துறையின் மூலமாக ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு*

சென்று, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

207—

சுற்றுலாத் தலம்

***11851—திரு. மு. பாபு:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, இடைகழிநாடு பேரூராட்சி, ஆலம்பரைகோட்டையை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செய்யூர் தொகுதி, இடைகழிநாடு பேரூராட்சிக்குட்பட்ட ஆலம்பரைகோட்டை தமிழ்நாடு தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சார்பாக ஆலம்பரைகோட்டை பகுதியினை மேம்படுத்தும்பொருட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியின் மூலமாக 3 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், தொல்லியல் துறை நிதியின் மூலமாக கோட்டையின் முன்பக்கம் சூரிய மின்சக்தி விளக்கு வசதிகள் ரூ.40 ஆயிரம் செலவில் தற்போது செய்து தரப்பட்டுள்ளன.

ஆலம்பரைகோட்டை பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் தேவையின் அடிப்படையில், பல்வேறு அடிப்படை வசதிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தொடர்புடைய தொல்லியல் துறையின்மூலம் கருத்துரு மற்றும் திட்ட